**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**MCOP.No. 14 /2023**

Deposition of witness for **PW1** for Petitioner and solemnly affirmed and oath for sworn taken file by Tr. R.Sankar, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | |
|---|---|---|---|
| Name | : Syed Nayaz | Father Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : Hindu | Age | : |

**நாள்:27.032024**

**மனுதாரர் முதல் விசாரணை :**

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் மனுதாரர், ம.சா.1 ஆக இருந்து எனது முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதனை சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். அசல் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை சான்றாவணங்களாக பெற வேண்டுகிறேன். குற்ற எண்.435/2021 முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் **Ex.P**1 ஆகவும், 28.09.2021ம் தேதி விடுவிப்பு சான்றிதழ் அசல் **Ex.P**2 ஆகவும், எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவு சான்றிதழ் ஜெராக்ஸ் காப்பி **Ex.P**3 ஆகவும், எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு படிவம் ஜெராக்ஸ் காப்பி **Ex.P**4 ஆகவும், எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் ஜெராக்ஸ் காப்பி **Ex.P**5 ஆகவும், மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் சரிபார்க்கப்பட்டது **Ex.P**6 ஆகவும், மனுதாரருக்கு வழங்கப்பட்ட மருத்துவ பில்கள் அசல் **Ex.P**7 ஆகவும், (2ம் எதிர்மனுதாரர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது). குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

பஜாஜ் பல்சர் வாகனத்தை நான் தான் ஓட்டி சென்றேன். அந்த வாகனம் எனது அண்ணனுக்கு பாத்தியப்பட்டது. விபத்தின் போது எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. எனது வண்டியையும் எதிர்மனுதாரர் வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆயவு செய்துள்ளார் என்றால் ஆமாம். இருசக்கர வாகனத்தை பரிசோதனை செய்து மோட்டார் வாகன ஆய்வாளர் வழங்கிய ஆய்வறிக்கை ஜெராக்ஸ் நகல் **எ.ம.சா.ஆ.1.** எதிாமனுதாரர் வாகனத்தை பரிசோதித்து மோட்டார் வாகன ஆய்வாளர் வழங்கிய ஆய்வறிக்கை **எ.ம.சா.ஆ.2.** கார் எனக்கு முன்பாக சென்று கொண்டு இருந்தது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்துள்ளேன். நான் எனது கவனக்குறைவை மறைத்து இழப்பீடு பெறுவதற்காக 1ம் எதிர்மனுதாரர் தான் கவனக்குறைவு என்று புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் தான் காரின் இடது புறமாக காரை

கவனக்குறைவாக முந்தி செல்ல முயற்சி செய்ததில் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தான் காரில் இடது இன்டிகேடர் மற்றும் பம்பரில் சேதம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அது பற்றி மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் சொல்லி உள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. நான் கவனமாக எனது வாகனத்தை ஓட்டி வந்து இருந்தால் விபத்து நடந்து இருக்காது என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. வலது காலில் இரண்டு எலும்புகளும் முறிந்துவிட்டது. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் அந்த மருத்துவரை விசாரணை செய்யாததால் ஏற்று கொள்ள கூடாது என்றால் சரியல்ல. விபத்துக்கு முன்பு மெக்கானிக் வேலை செய்தேன். நான் மெக்கானிக்காக வேறு கடையில் தான் வேலை செய்தேன். நான் தற்போதும் மெக்கானிக்காக வேலை செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக வேலை செய்வது இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு விபத்தின் காரணமாக நிரந்தர ஊனமோ செயல்திறன் பாதிப்போ வருமான இழப்போ இல்லை என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை மற்றும் வட்டி விகிதம் மிகவும் அதிகம் என்றால் சரியல்ல. இறுதி உத்தரவு பிறகப்பிக்கும் போது எனது கவனக்குறைவையும் கருத்தில் கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது மறுவிசாரணை இல்லை.**

**ஓம்./-எல்.கலைவாணி,பி.எ.,பி.எல்.,**
**சார்பு நீதிபதி,**
**தேன்கனிக்கோட்டை.**